[26th August 1970

ராஜா கால்வாய் தண்ணீர்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலாக்க வேண்டுகிறேன்—

சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுகா, சாணர்பாளையத்தில் இருக்கும் நிலங்களுக்கு ராஜா கால்வாய் தண்ணீரை இறைவை மூலம் உபயோகிக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டத்தில் உள்ள சாணர்பாளையம், சேளுர் பிலிக்கால்பாளையம், எஸ். கொண்டலம் ஆகிய கிராமங்களில் 472.87 ஏக்கர் பரப்பளவிற்கு பாசனம் அளிப்பதற்காக ராஜா கால்வாயிலிருந்து நீர் இறைத்துத் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் உள்ளது.

Ganges Waters

* 27. Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the news item that the Union Minister for Irrigation stated that it was possible to bring the waters of the Ganges to Tamil Nadu and that the Southern States should come forwtrd to meet the expenditure for conducting land survey; and

(*b*) the view of the Tamil Nadu Government regarding this?

கங்கை நதி நீர்

திரு. ஆர் கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கங்கை நதி நீரை தமிழ் நாடு வரை கொண்டுவருவது சாத்தியமென்றும், இதற்கான நில அளவை நடத்துவதற்காகும் செலவை தென் மாநிலங்கள் ஏற்கவேண்டுமென்றும் சென்னையில் மத்திய அரசின் மாண்புமிகு பாசன அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதாக வெளியான செய்தியை அரசு அறியுமா?

(இ) இது பற்றி தமிழக அரசின் கருத்தென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) & (இ) இது குறித்து ஆய்வு செய்யுமாறு பாசன ஆணைக்குழுவை அரசு கேட்டுள்ளது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, கங்கை நீரைத் தமிழ்நாடு வரையில் கொண்டுவருவது பற்றிய மத்திய அரசின் ஆய்வு எந்த நிலையில் இருக்கிறது? அந்தத் திட்டத்திற்காகும் செலவு என்ன என்பதைப் பற்றி ஏதேனும் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கங்கையையும் காவிரியையும் இணைக்கிற இந்தத் திட்டம் மத்திய அரசின் மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சரால் சொல்லப்பட்ட கருத்தாகும். அரசிற்கு எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை. அப்படி வந்தால், இந்த அரசு அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. இதுகுறித்து இர்ரிகேஷன் கமிஷனை ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

TRUTH ALONE TRIUMPHS

26th August 1970]

THIRUMATHI S. MANJUBHASHINI: May I know, Sir, whether the Government are aware that this scheme now proposed by Dr. K. L. Rao was first mooted by Sir C. P. Ramaswami Aiyar when he was Executive Councillor in Madras during the British days and whether any scheme has been formulated by him and left in the archives of this State?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I am not aware whether it was initiated by Sir C. P. Ramaswami Aiyar because I was not born at that time.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, காவிரி நீரைத் தமிழ் நாட்டிற்குக் கொடுப்பதில் பல்வேறு பிரச்னைகள் கிளம்பியிருக்கும்போது கங்கை நதியைக் காவிரியோடு இணைக்கிற இந்தத் திட்டத்தை மத்தியில் உள்ள மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளுமா என்பதை மத்திய அரசாங்கம் தெளிவாகக் கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: மத்திய அரசு எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்கவில்லை. மாநில அரசுகள் இந்தத் திட்டத்தை ஒப்புக் கொண்டால் நலமாக இருக்குமென்று கருதுகிறோம்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, கங்கையையும் காவிரியையும் ஒன்றாக இணைத்துத் தண்ணீர் தரும் திட்டம் இருக்கிறதே, அந்தத் திட்டத்தைத் தமிழ் நாட்டிற்குத் தருவதாகக் கூறுகிறார்களே, அது நடைமுறையில் நடக்குமா அல்லது கனவாகப் போய்விடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: சில வேளைகளில் கனவுகள் கூட நினைவாவது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

Bridge across Ayyar River

* 28 Q.—THIRU T. K. SUBBIAH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Tiruchi District Development Council at its meeting on 20th March 1967 passed a resolution requesting the Government to construct a bridge across Ayyar River in Veeramachanpatti village, Musiri Taluk, Tiruchi district and sent it to the Tamil Nadu Government; and

(b) if so, the action taken thereon?

அய்யாறு நதியின் குறுக்கே பாலம்

திரு. டி. கே. சுப்பையா: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், வீரமச்சான்பட்டி கிராமத்தில் அய்யாறு நதியின் குறுக்கே பாலம் அமைக்கக் கோரி திருச்சி வடக்கு மாவட்டம் வளர்ச்சி மன்றம் 20---3---1967-ல் நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பியதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?